| Roll No. | | | | | | | | | | | Serial No. of Q. C. A. B. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 36 + 19 = 55 ] [ ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 32

Total No. of Questions : 36 + 19 = 55 ] [ Total No. of Printed Pages : 32

ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : **83-T** **ವಿಷಯ : ವಿಜ್ಞಾನ**

**Code No. : 83-T** **Subject : SCIENCE**

**( ಭೌತಶಾಸ್ತ್ರ, ರಸಾಯನಶಾಸ್ತ್ರ ಮತ್ತು ಜೀವಶಾಸ್ತ್ರ / Physics, Chemistry & Biology )**

(ತಮಿಳು ಭಾಷಾಂತರ / Tamil Version )

ದಿನಾಂಕ : 05. 04. 2012 ] [ Date : 05. 04. 2012

ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 10-30 ರಿಂದ ಮಧ್ಯಾಹ್ನ 1-45 ರವರೆಗೆ ] [ Time : 10-30 A.M. to 1-45 P.M.

ಪರಮಾವಧಿ ಅಂಕಗಳು : 100 ] [ Max. Marks : 100

**FOR OFFICE USE ONLY**

**PART – A**

| Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | | 9. | | 17. | | 25. | | 33. | |
| 2. | | 10. | | 18. | | 26. | | 34. | |
| 3. | | 11. | | 19. | | 27. | | 35. | |
| 4. | | 12. | | 20. | | 28. | | 36. | |
| 5. | | 13. | | 21. | | 29. | | × | |
| 6. | | 14. | | 22. | | 30. | | × | |
| 7. | | 15. | | 23. | | 31. | | × | |
| 8. | | 16. | | 24. | | 32. | | × | |
| ***Total Marks of Part – A*** | | | | | | | | | |

**PART – B**

| Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 37. | | 41. | | 45. | | 49. | | 53. | |
| 38. | | 42. | | 46. | | 50. | | 54. | |
| 39. | | 43. | | 47. | | 51. | | 55. | |
| 40. | | 44. | | 48. | | 52. | | × | |
| ***Total Marks of Part – B*** | | | | | | | | | |

| **Total Marks in words** | | **Grand Total** | |
|---|---|---|---|
| 1. ✓ | | | |
| 2. ✓ | | ✓ | ✓ |
| *Signature of Evaluators* | *Registration No.* | *Signature of the Deputy Chief* | *Signature of the Room Invigilator* |

*பொதுவான குறிப்புகள் :*

i) இந்த வினா விடைத்தாள் தொகுப்பில் பல்வகை விடை-வினா வகை ( Objective type ) வினாக்கள் மற்றும் விடைகளை எழுதும் வகை ( Subjective type ) வினாக்கள் என மொத்தம் 55 வினாக்கள் உள்ளன.

ii) இந்த வினா-விடைத்தாள் தொகுப்பில் இரண்டு பகுதிகள் உள்ளன. **பகுதி - அ** வில் **இயற்பியல்** மற்றும் **வேதியியல்** சம்பந்தப்பட்ட வினாக்களும் மற்றும் **பகுதி - ஆ** வில் **உயிரியல்** சம்பந்தப்பட்ட வினாக்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

iii) இந்த வினா-விடைத்தாள் **பகுதி - அ** 36 வினாக்களையும் மற்றும் **பகுதி - ஆ** 19 வினாக்களையும் கொண்டுள்ளது.

iv) பல்வகை விடை-வினா வகை வினாக்களுக்கு ( Objective type questions ) விடை எழுதுவதற்கான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த இடத்தில் நீங்கள் சரியான விடை என தேர்வு செய்த விடையை அவ்விடைக் குறியீட்டுடன் முழுவதுமாக எழுத வேண்டும்.

v) விடைகளை எழுதும் வகை வினாக்களுக்கு ( Subjective type questions ) ஒவ்வொரு வினாவிற்கும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. நீங்கள் ஒதுக்கப்பட்டுள்ள இடத்திற்குள்ளாகவே விடையளிக்க வேண்டும்.

vi) பல்வகை விடை வினாவகை ( Objective type ) மற்றும் எழுதும் வகை வினாக்களுக் ( Subjective type ) கென வழங்கப்பட்டுள்ள குறிப்புகளை கவனமாக கடைப்பிடிக்கவும்.

vii) மாணாக்கர்கள் விடைகளை பென்சிலில் எழுதுதல் கூடாது. ( வரைபடங்கள், படங்கள் மேப்புகளை தவிர ). இவ்விதியை மீறி பென்சிலால் எழுதப்பட்ட விடைகள் மதிப்பீடு செய்யப்படமாட்டாது.

viii) பல்வகை வினா-விடை வகை வினாக்கள், கோடிட்ட இடங்களை நிரப்புதல் மற்றும் பொருத்துக போன்ற வினாக்களில் அழித்து எழுதுதல் / சுரண்டுதல் / குறியிடுதல்கள் போன்றவை அனுமதிக்கப்பட மாட்டாது. இவ்விதியை மீறினால் விடைகள் மதிப்பீடு செய்யப்படமாட்டாது.

ix) ஒவ்வொரு பக்கத்தின் அடியிலும் வினாக்களை செய்து பார்ப்பதற்கென இடம் தரப்பட்டுள்ளது.

x) மாணாக்கர்களுக்கு வினாத்தாளைப் படிப்பதற்கென 15 நிமிடங்கள் கூடுதலாக தரப்பட்டுள்ளது.

## பகுதி - அ
## ( இயற்பியல் & வேதியியல் )

கீழ்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் / முழுமைபெறாத கூற்றுகளுக்கும் ( Incomplete statements ) நான்கு மாற்று விடைகள் தரப்பட்டு உள்ளன. இவற்றுள் ஒன்று மட்டுமே சரியானது அல்லது மிகப்பொருத்தமானது. மிகச் சரியான விடையை அதன்கீழ் விடப்பட்டுள்ள விடைப்பகுதியில் அதன் குறியீட்டு எழுத்துடன் முழுமையாக எழுதவும். $10 \times 1 = 10$

1. குழந்தைகளை காலை சூரிய ஒளியில் சிறிது நேரம் விளையாடவிடும் வழக்கம் மிகவும் நல்லது. இவ்வழக்கத்தின் மூலம் அவர்களது உடம்பிற்கு .................... கிடைக்கிறது.

(A) வைட்டமின் $B$

(B) வைட்டமின் $C$

(C) வைட்டமின் $D$

(D) வைட்டமின் $A$.

*விடை :* ______________________

**( SPACE FOR ROUGH WORK)**

2. நிலவுக்கும் பூமிக்கும் இடையேயுள்ள தூரத்தை பின்வரும் எந்த தொழில்நுட்பத்தின் மூலம் அளக்க முடியும் ?

(A) லேசர் ரேன்ஜிங் ( Laser ranging )

(B) ரேடியோகிராபி ( Radiography )

(C) சோனார் ( Sonar )

(D) ஹாலோகிராபி ( Holography ).

*விடை :* ______________________

3. உள் எரி என்ஜினில் ( Internal combustion engine ) பின்வரும் எந்த ஸ்ட்ரோக்கில் உள்ளீடு வால்வு மூடியும் வெளியீடு வால்வு திறந்தும் இருக்கும் ?

(A) உள்ளிழுக்கும் ஸ்ட்ரோக் ( Intake stroke )

(B) அழுத்த ஸ்ட்ரோக் ( Compression stroke )

(C) பவர் ஸ்ட்ரோக் ( Power stroke )

(D) எக்ஸ்ஹாஸ்ட் ஸ்ட்ரோக் ( Exhaust stroke ).

*விடை :* ______________________

4. உள் எரி என்ஜினின் ( Internal combustion engine ) ஒரு குறைபாடு

(A) இது திறன் குறைந்தது

(B) என்ஜின் பிரேக்டவுன் ( Break-down ) ஆகும் வாய்ப்புகள் உள்ளது

(C) இது அதிக கார்பன் மோனாக்ஸைடை வெளிவிடுகிறது

(D) இது அதிக கார்பன் டை ஆக்ஸைடை வெளிவிடுகிறது.

*விடை :* ______________________

**( SPACE FOR ROUGH WORK)**

5. கீழ்வரும் எந்தச் சூழ்நிலைகளில் அல்ட்ராசவுண்ட் ஸ்கேனர் ( Ultrasound scanner ) பயன்படுத்துவது மிகச் சிறந்தது ?

(A) உடைந்துபோன எலும்புகளை கண்டறிய

(B) சூட்கேஸில் உள்ள உலோகப் பொருட்களைக் கண்டறிய

(C) இதயம் வேலை செய்வதைப் பற்றி ஆராய

(D) பற்களில் உள்ள குறைபாடுகளை கண்டறிய.

*விடை :* ____________________

6. புயூட்டேன் ( Butane )-ஐ புயுட்டின் ( Butene ) ஆக மாற்ற அதிலிருந்து எத்தனை ஹைட்ரஜன் அணுக்களை நீக்க வேண்டும் ?

(A) 2 (B) 4

(C) 6 (D) 8.

*விடை :* ____________________

7. சோப்பு தயாரித்தலில் உற்பத்திச் செலவைக் குறைக்க நீவிர் பின்வரும் மூலப் பொருட்களில் எதைப் பயன்படுத்துவீர்கள் ?

(A) கச்சா எண்ணெய் ( Crude oil )

(B) தேங்காய் எண்ணெய் ( Coconut oil )

(C) கடலை எண்ணெய் ( Groundnut oil )

(D) உண்ணத்தகாத தாவர எண்ணெய் ( Non-edible vegetable oil ).

*விடை :* ____________________

**( SPACE FOR ROUGH WORK)**

8. சவுக்காரங்கள் ( Detergents ) தயாரிப்பதில் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் யாவை ?

(A) தாவர எண்ணெய் ( vegetable oil ), சோடியம் ஹைட்ராக்ஸைடு ( sodium hydroxide ), நீண்ட சங்கிலி ஹைட்ரோகார்பன் ( long chain hydrocarbon )

(B) நீண்ட சங்கிலி ஹைட்ரோ கார்பன், சோடியம் ஹைட்ராக்ஸைடு, சல்ப்யூரிக் அமிலம் ( sulphuric acid )

(C) நீண்ட சங்கிலி ஹைட்ரோ கார்பன், தாவர எண்ணெய், சல்ப்யூரிக் அமிலம்

(D) தாவர எண்ணெய், சோடியம் ஹைட்ராக்ஸைடு, சல்ப்யூரிக் அமிலம்.

*விடை :* ____________________

9. மனிதர்களில் மிகக் குறைந்த வயதிலேயே கண்களில் புரை ( Cataract ) ஏற்படுவதற்கான காரணம்

(A) ரேடியோ அலைகள் ( radiowaves )

(B) அல்ட்ரா சோனிக்ஸ் ( ultrasonics )

(C) அகச்சிவப்பு கதிர்கள் ( infrared rays )

(D) புறஊதாக் கதிர்கள் ( ultraviolet rays ).

*விடை :* ____________________

10. சூரிய ஒளியின் உதவியால் நீரை சூடேற்றும் இயந்திரத்தில் கருப்பு நிற உட்கவரும் ( Absorber pipe ) குழாயானது வளைத்து வைக்கப்பட்டுள்ளது. ஏனெனில்

(A) இது திறனை ( increases the efficiency ) அதிகப்படுத்துகிறது

(B) நீர் எளிதாக செல்வதற்கு உதவுகிறது

(C) நீரை அதிகநேரம் குழாயில் இருக்க செய்கிறது

(D) இது உட்கவரும் பரப்பை அதிகரிக்கிறது.

*விடை :* ____________________

**( SPACE FOR ROUGH WORK)**

பின்வருவனவற்றிற்கு விடையளி : 6 × 1 = 6

11. வளைவான பாதையில் ஓடும்போது ஓடுபவர் ஏன் வளைவின் மையத்தை நோக்கி சாய்ந்து ஓடுகிறார் ?

12. ஒரு சென்டிரிப்யூஜில் ( Centrifuge ) நுண்ணிய மணல், மரத்தூள் மற்றும் நீர் ஆகிய கலவையை சுற்றச் செய்யும் போது, மணல் ஆனது முனைகளை ( Edges ) நோக்கி விலக்கமடைகிறது. ஏன் ?

13. சூரியக் கலனின் ( Solar cell ) ஏதேனும் இரு பயன்களைத் தருக.

**( SPACE FOR ROUGH WORK)**

14. சூரியக் கரும்புள்ளிகள் ( Sun-spots ) கருமையாகத் தோன்றக் காரணம் என்ன ?

15. சமைத்தலுக்கு அழுத்தற் சமையற்கலனைப் ( Pressure cooker ) பயன்படுத்துவதன் மூலம் எரிபொருள் எங்ஙனம் சேமிக்கப்படுகிறது ?

16. பெர்முடிட் முறையின் ( Permutit process ) மூலம் கடின நீரை ( Hard water ) மென்னீராக ( Soft water ) மாற்ற முடிந்தாலும், அந்த நீர் குடிப்பதற்கு உகந்தது அல்ல. ஏன் ?

**( SPACE FOR ROUGH WORK)**

17. **பட்டியல்-அ** வில் உள்ள சேர்மங்களை ( Compounds ) **பட்டியல்-ஆ** வில் உள்ள மூலக்கூறு வாய்ப்பாடுகளுடன் பொருத்தி கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் விடைகளை எழுதவும் : 4 × 1 = 4

| **பட்டியல் - அ** | **பட்டியல் ஆ** |
|---|---|
| (a) புரோப்பேன் ( Propane ) | (i) $C_2H_6$ |
| (b) அசிட்டிலீன் ( Acetylene ) | (ii) $C_3H_6$ |
| (c) ஈதேன் ( Ethane ) | (iii) $C_4H_6$ |
| (d) ப்யூட்டைன் ( Butyne ) | (iv) $C_3H_8$ |
| | (v) $C_6H_{12}$ |
| | (vi) $C_6H_6$ |
| | (vii) $C_2H_2$. |

*விடைகள் :*

a) ________________

b) ________________

c) ________________

d) ________________

கோடிட்ட இடங்களை நிரப்புக : 3 × 1 = 3

18. *n-p-n* டிரான்ஸிஸ்டரின் அடிப்பக்கத்தில் ( Base region ) உள்ள மாசூட்டியின் ( Dopant ) இணைதிறன் .................... ஆகும்.

19. செயற்கைகோளின் தடம் காணுவதில் ( Tracking ) பயன்படுத்தப்படும் தத்துவம் .................... ஆகும்.

20. கண்ணாடியை மெதுவாக குளிர வைக்கும்முறை .................... என அழைக்கப்படுகிறது.

( SPACE FOR ROUGH WORK)

பின்வரும் வினாக்களுக்கு விடையளி : 9 × 2 = 18

21. மோட்டார் மற்றும் டைனமோவில் உள்ள பொதுவான பாகங்களின் பெயர்களைத் தருக.

22. ஒரு DC மோட்டாரின் தெளிவான படம் வரைக.

( SPACE FOR ROUGH WORK)

23. ஒளிமின் விளைவைப் ( Photoelectric effect ) பற்றிய ஏதேனும் இரு சோதனை விவரங்களை ( Facts ) தருக.

24. ஒரு ரேடியோ ஏற்பியின் ( Radio receiver ) கட்டப்படம் வரைக.

**( SPACE FOR ROUGH WORK)**

25. வெள்ளரி என்ஜினின் ( External combustion engine ) தெளிவான படம் வரைக.

**( SPACE FOR ROUGH WORK)**

26. குளோரின் நிரம்பிய ஒரு வாயுக்கலனில் சூடாக்கப்பட்ட அலுமினியம் தூளை தூவும்போது உருவாகும் விளைபொருள் யாது ? இவ்வினைக்காக சமன் செய்யப்பட்ட வேதிவினை சமன்பாட்டை தருக.

27. a) சிலிகான் ( Silicon ) மற்றும் சுட்டகரி ( Coke ) இவற்றிலிருந்து தயாரிக்கப்பட்ட பொருட்கள் ( Substance ) அரைப்பு கருவிகளில் ( Grinding tools ) எங்ஙனம் பயன்படுத்தப்படுகிறது ?

**( SPACE FOR ROUGH WORK)**

b) சிலிக்கான் மற்றும் நீரிலிருந்து நீவிர் எங்ஙனம் ஹைட்ரஜன் வாயுவை பெறுவீர்கள் ?

28. தெர்மோசெட்டிங் பிளாஸ்டிக்குகள் ( Thermo setting plastics ) மற்றும் தெர்மோ பிளாஸ்டிக்குகள் ( Thermo plastics ) இவற்றுக்கிடையேயுள்ள இரு வேறுபாடுளைத் தருக.

**( SPACE FOR ROUGH WORK)**

29. கடினநீர் ( Hard water ) என்றால் என்ன ? நீரில் தற்காலிக கடினத்தன்மையை ஏற்படுத்தும் இரு உப்புகளின் ( Salts ) பெயர்களைத் தருக.

( SPACE FOR ROUGH WORK)

பின்வருவனவற்றிற்கு விடையளி : 4 × 3 = 12

30. கோள்களின் இயக்கம் பற்றிய கெப்ளரின் மூன்று விதிகளை எழுதுக.

**( SPACE FOR ROUGH WORK)**

31. a) கதிரியக்க கார்பன் மூலம் பின்வரும் எந்த பொருட்களின் வயதை அறியலாம் ?

குவார்ட்ஸ் ( Quartz ), மரக்கட்டை ( Wood ), தாமிரம் ( Copper ).

b) கதிரியக்க பாஸ்பரஸின் அரை ஆயுட்காலம் 3 நிமிடங்கள், தயாரித்த பிறகு அது சிதைவடைகிறது. 12 நிமிடங்களில் 2 கிராம் மீதமிருந்தால், தயாரித்த போது இருந்த ஆரம்ப நிறை ( Initial mass ) எவ்வளவு ?

**( SPACE FOR ROUGH WORK)**

32. நிறமாலை வருவி அல்லது ஸ்பெக்ட்ரோஸ்கோப் ( Spectroscope ) என்றால் என்ன ? ஒரு தொலை நோக்கியின் நிறமாலை வருவி மற்றும் இணையாக்கி ( Collimator )-ன் செயல்களை எழுதுக.

**( SPACE FOR ROUGH WORK)**

33. ஒரு அணு மின் உலையின் தெளிவான படம் வரைந்து பின்வரும் பாகங்களை குறிக்க.

i) தணிப்பான் ( Moderator )  ii) வெப்பமாற்றி ( Heat exchanger ).

( SPACE FOR ROUGH WORK)

பின்வருவனவற்றிற்கு விடையளி : $3 \times 4 = 12$

34. a) சுற்றுப்பாதை திசைவேகம் ( Orbital velocity ) என்றால் என்ன ?

b) புவியில் இருந்து $h$ மீட்டர் உயரத்தில் நிலை நிறுத்தப்பட்டுள்ள ஒரு செயற்கைக்கோளின் சுற்றுப்பாதை திசைவேகத்திற்கான சமன்பாட்டினை எழுதுக. பயன்படுத்தப்பட்டுள்ள குறியீடுகளின் பொருளை ( Meanings of symbols )யும் தருக.

c) சுற்றுப்பாதை திசைவேகம் மற்றும் விடுபடு திசைவேகம் ( Escape velocity ) இவற்றிற்கிடையேயுள்ள தொடர்பு யாது ?

( SPACE FOR ROUGH WORK)

35. ஒரு விண்மீனின் வாழ்க்கை சுழற்சியில் கீழ்வரும் நிலைகளை விவரி.

i) புரோட்டோ ஸ்டார் ( Proto star ) ii) ஸ்டெடி ஸ்டார் ( Steady star ).

**( SPACE FOR ROUGH WORK)**

36. இரும்பை பிரித்தெடுக்க உதவும் ஊது உலையின் ( Blast furance ) படத்தை வரைந்து ஏதேனும் மூன்று பாகங்களைக் குறிக்கவும்.

**( SPACE FOR ROUGH WORK)**

## பகுதி - ஆ

### ( உயிரியல் )

கீழ்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் / முழுமைபெறாத கூற்றுகளுக்கும் ( Incomplete statements ) நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று மட்டுமே சரியான அல்லது மிகப் பொருத்தமானது. மிகச் சரியான விடையை அதன் கீழ் தரப்பட்டுள்ள விடைப் பகுதியில் குறியீட்டு எழுத்துடன் முழுமையாக எழுதவும். $5 \times 1 = 5$

37. பின்வருவனவற்றுள் எது அதிகஅளவு சான்தோஃபில்லை கொண்டுள்ளது ?

    (A) பாலிசைபோனியா ( Polysiphonia )

    (B) எக்டோ கார்பஸ் ( Ectocarpus )

    (C) ஸ்பைரோகைரா ( Spirogyra )

    (D) யுலோதிரிக்ஸ் ( Ulothrix ).

    *விடை :* ____________________

38. ஒருவரை அடையாளம் காண பயன்படுவது

    (A) DNA கைரேகை தொழில்நுட்பம் ( DNA fingerprint technology )

    (B) DNA மறுசேர்க்கை தொழில்நுட்பம் ( Recombinant DNA technology )

    (C) மரபு பொறியியல் ( Genetic engineering )

    (D) குளோனிங் தொழில்நுட்பம் ( Cloning technique ).

    *விடை :* ____________________

**( SPACE FOR ROUGH WORK)**

39. ஒருவருக்கு விட்ரியக்டோமி ( Vitrectomy ) அறுவை சிகிச்சையானது பரிந்துரைக்கப்படுகிறது. எனில், சரியாக செயல்படாத சுரப்பி எது ?

(A) தைராய்டு


(B) லாங்கர்ஹான் திட்டுகள் ( Islets fo Langerhans )

(C) கோனாடுகள் ( Gonads )

(D) அட்ரீனல் ( Adrenal ).

*விடை :* ____________________

40. கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தை சரியான வாழ்க்கை முறையை கொண்டு நிரப்புக :




(A) சுவாசம் ( Respiration ) (B) உணவூட்டம் ( Nutrition )

(C) வளர்ச்சி ( Growth ) (D) இனப்பெருக்கம் ( Reproduction ).

*விடை :* ____________________

41. ஒருவருக்கு திக்குவாய் பிரச்சனை உள்ளது. எனில் மூளையில் எந்த பகுதி பாதிக்கப்பட்டுள்ளது ?

(A) தாலமஸ் ( Thallamus) (B) ஹைப்போதாலமஸ் ( Hypothallamus )

(C) சிறுமூளை ( Cerebellum ) (D) பெருமூளை ( Cerebrum ).

*விடை :* ____________________

**( SPACE FOR ROUGH WORK)**

42. **பட்டியல் - அ** வில் முதுகெலும்பிகளின் பெயர்கள் தரப்பட்டுள்ளன. இவற்றை **பட்டியல் - ஆ** வில் அவற்றின் குணாதிசயங்களுடன் ( Characteristic features ) பொருத்தவும்: 4 × 1 = 4

| **பட்டியல் - அ** | | | **பட்டியல் - ஆ** |
|---|---|---|---|
| (a) | பாம்பு | (i) | நான்கு அறைகளால் ஆன இதயம், குட்டி போடுதல் மற்றும் வெப்ப இரத்த பிராணி ( Homeothermic animal ) |
| (b) | கடற்குதிரை | (ii) | இரண்டு அறைகளால் ஆன இதயம், குட்டிபோடுதல் மற்றும் வெப்ப இரத்த பிராணி |
| (c) | முயல் | (iii) | நான்கு அறைகளால் ஆன இதயம், முட்டை போடுதல் மற்றும் வெப்ப இரத்த பிராணி |
| (d) | காகம் | (iv) | இரண்டு அறைகளால் ஆன இதயம், முட்டையிடுதல் மற்றும் குளிர் இரத்த பிராணி ( Poikilothermic animal ) |
| | | (v) | மூன்று அறைகளால் ஆன இதயம், குட்டி போடுதல் மற்றும் குளிர் இரத்த பிராணி |
| | | (vi) | நான்கு அறைகளால் ஆன இதயம், முட்டையிடுதல் மற்றும் குளிர் இரத்த பிராணி |
| | | (vii) | மூன்று அறைகளால் ஆன இதயம், முட்டையிடுதல் மற்றும் குளிர் இரத்தப் பிராணி. |

*விடைகள் :*

a) ______________________________

b) ______________________________

c) ______________________________

d) ______________________________

ஒருவரியில் விடையளிக்க : 4 × 1 = 4

43. உயிரி தொழில்நுட்பம் அல்லது பயோடெக்னாலஜி ( Biotechnology ) என்றால் என்ன ?

______________________________

______________________________

______________________________

______________________________

**( SPACE FOR ROUGH WORK)**

44. சாலையோரங்களில் விற்கப்படும் கலர் கலரான ஐஸ்களை ( Coloured ice candy ) வாங்கி சாப்பிடுவதை தவிர்க்க வேண்டும். ஏன் ?

45. காது கேளாத தன்மையுடன் பிறந்த குழந்தையானது ஊமையாகவும் இருக்கும். ஏன் ?

46. அதிவேகமாக உடல் எடையை இழக்கும் நீரிழிவு நோயாளியானவர், சாதாரண நீரிழிவு நோயாளியை விட அதிக குளிர்ச்சியை ( Chill ) உணர்கிறார். ஏன் ?

**( SPACE FOR ROUGH WORK)**

பின்வரும் வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடையளி : 6 × 2 = 12

47. கண்ணீர் சுரப்பிகளின் ( Lacrymal glands ) சுரப்புகளின் ( Secretion ) ஏதேனும் இரு செயல்களைக் குறிப்பிடுக.

48. கீழ்வருவனவற்றில் பொதுவாக காணப்படும் கலப்படப்பொருட்களை பட்டியலிடுக :

a) தேன் ( Honey )

b) மஞ்சள் தூள் ( Turmeric powder )

c) காபித்தூள் ( Coffee powder )

d) மிளகு ( Pepper ).

**( SPACE FOR ROUGH WORK)**

49. 40 வயதுடைய ஒருவரின் தைராய்டு சுரப்பி குறைவாக செயல்படுகிறது ( Underactive ). எனில், அந்த நபரிடம் இக்குறைபாட்டினால் காணப்படும் ஏதேனும் நான்கு அறிகுறிகளை பட்டியலிடுக.

50. இருவகையான உயிரி நில-வேதிய சுழற்சிகளுக்கு ( Biogeochemical cycle ) இடையேயான முக்கிய வேறுபாடுகள் யாவை ?

**( SPACE FOR ROUGH WORK)**

51. முட்டை போடுதலிலிருந்து ( **oviparity** ) குட்டி போடுதலுக்கு ( **viviparity** ) முதுகெலும்பிகள் பரிணாம வளர்ச்சி ( **Evolve** ) அடைந்ததின் அவசியம் என்ன ?

52. மருத்துவர் ஒரு நோயாளியிடம் நகரத்தின் நடுவில் உள்ள அவரது வீட்டிலிருந்து, நகரத்திற்கு வெளியே மேலும் லைக்கன்கள் அதிகம் காணப்படும் இடத்திற்கு சென்று வசிக்குமாறு ஆலோசனை கூறுகிறார். மருத்துவர் இவ்வாறு கூறுவதற்கான காரணம் யாது ?

**( SPACE FOR ROUGH WORK)**

பின்வருவனவற்றிற்கு விடையளி : 2 × 3 = 6

53. a) புறத்தோல் அடுக்கு ( Epidermis ) என்பது சிக்கலான நிலைத்த திசு அல்ல ( Epidermis is not a complex permanent tissue ). ஏன் ?

b) ஒரு விவசாயி நிலத்தை வாங்கிய பிறகு, அந்நிலத்தில் பூச்சிகளை உண்ணும் தாவரங்கள் அதிகமாக இருப்பதை கண்டுபிடிக்கிறார். மேலும் அந்த நிலத்தில் அவர் விவசாயம் செய்ய வேண்டாம் என தீர்மானிக்கிறார். ஏன் ?

**( SPACE FOR ROUGH WORK)**

54. ஹெச்.ஐ.வி. ( HIV ) யின் படம் வரைந்து ஏதேனும் இரு பாகங்களைக் குறிக்கவும் :

**( SPACE FOR ROUGH WORK)**

55. மனித மூளையின் நீள்வெட்டுத் தோற்றத்தை ( Vertical section ) வரைந்து பின்வரும் பாகங்களைக் குறிக்கவும் : 4

a) பெருமூளை ( Cerebrum )

b) சிறுமூளை ( Cerebellum )

c) மெடுல்லா ஆப்ளங்கேட்டா ( Medulla oblongata )

d) பான்ஸ் ( Pons ).

**( SPACE FOR ROUGH WORK)**

( SPACE FOR ROUGH WORK)